# சிலுவைப்பாதை 2021

- மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

## தொடக்க செபம்

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!

எல்லோரும்: இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச்சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

## சுருக்கமான மனத்துயர் செபம்:

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன்.

*எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக,*

*இறைவா, என்மேல் இரக்கமாயிரும்.*

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு

அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### சிலுவைப்பாதை நிலையின் தொடக்கத்தில்

இயேசு கிறிஸ்து பாடுபட்ட ----ஆம் நிலை

இயேசுவே! உமது திருச்சிலுவையை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஏனெனில் உமது திருச்சிலுவையால் நீர் எங்களை மீட்டருளினீர்.

### சிலுவைப்பாதை நிலையின் முடிவில்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே

எங்கள் மேல் இரக்கமாயிரும் - 2

இறந்த நம்பிக்கையாளர்கள் உமது இரக்கத்தினால் உம்மில் நிறைவாழ்வு பெறுவார்களாக! ஆமென்.

## முன்னுரை

புனித வளனாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆண்டிலே தச்சனாகிய இவரையே தன்னுடைய வளர்ப்புத் தந்தையாக இறைமகன் தேர்ந்தெடுத்தார். மீட்பின் பாதையில் தச்சனுக்கு கிடைக்கப் பெற்ற பாக்கியம் சிறப்பானதே.

திரு அவை இவரை உழைப்பாளர்களின் காவலராகக் கொண்டு பயணிக்க முற்பட்டுள்ளதை அறிந்துள்ள நாம், தொழிலாளர்கள், உழைப்பாளர்கள், கடும் உழைப்பின் பயன், சமூகம் அவர்களைப் பிரித்துப் பார்க்கும் பார்வை, அவர்களுடைய பாடுகள் போன்றவைகளை அவர்களது வாழ்வு நிலையோடு எண்ணிப் பார்த்து இயேசுவின் பாடுகளைத் தியானிக்க முன்வருவோம், உழைப்பாளர்களுக்கு செப உதவியினை பரிசாக்கிட முன்வருவோம்.

மனித வாழ்வின் நியதியே, நெற்றி வியர்வை நிலத்திலே சிந்திட, மனிதன் பாடுபட்டு உழைத்து உண்ண வேண்டும் என்பதனையே மனித குலத்தின் நியதியாக்கிட்டார் தந்தையாம் கடவுள் என்பதனை தொடக்க நூல் நமக்கு தெளிவாக்கி உள்ளது.

இந்த சிந்தனையோடு இந்த சிலுவைப்பாதை வழிபாட்டில் பக்தியுடனே பங்கெடுத்து பயன்பெறுவோம்.

இறையாசீர் நமதாகட்டும்!

## முதல் நிலை

## இயேசுவுக்கு மரணத் தீர்ப்பிடப்படுகிறது.

### உழைப்பின் அர்த்தம் அநீதியால் அவமதிப்புக்குள்ளாகிறது!

அநீதி எந்த வழியில் ஏற்பட்டாலும், யாருக்கு இழைக்கப்பட்டாலும் அது அர்த்தமில்லாதது என்பது மட்டுமல்ல. நல்லவைகளை, நீதியை அர்த்தமிழக்கச் செய்வதாகவும் அமைகின்றது என்பதுதான் யதார்த்தமாகவும்கூட.

நல்லவை யாவும் அர்த்தமுள்ளது. நீதியானவையும் அர்த்தமுள்ளதே; உழைப்பாளர்களின் உழைப்பும் அர்த்தமுள்ளதே.

எல்லா உழைப்பாளர்களும் இன்றைக்கு இடைத்தரகர்களால் வஞ்சிக்கப்படுகிறார்கள். விவசாயியின் விளைப் பொருட்கள் பத்து ரூபாய்க்கு வாங்கப்பட்டு எண்பது ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விலை உயர்வுக்காக பொருட்கள் தேக்கி வைக்கப்படுகிறது. இதனால் தேவை என்பது உருவாக்கப்பட்டு, அதனால் விலைவாசி உயர்வு என்பது தவிர்க்க முடியாததாகும் போது அநீதி இழைக்கப்படுகின்றது.

தனியார் மயமாக்கப்படும் எந்த உழைப்பும் சில தனி நபர்களுக்கு கொண்டாட்டமாகவும், உழைப்பாளர்களுக்கு திண்டாட்டமாகவும் அமைவதனால், உண்மையாய் உழைப்போருக்கு அநீதியே இழைக்கப்படுகிறது. இதனால் உழைப்பின் அர்த்தம் அந்த அநீதியினால் அவமதிப்புக்குள்ளாகின்றது.

இயேசுவுக்கு இழைக்கப்பட்ட அநீதியான தீர்ப்பு, அவர் பாடுபட்ட இறையாட்சிக்கு அவமதிப்பையே கொணர்ந்தது. இன்றும் நாம் இழைக்கும் அநீதியினால் கிறிஸ்துவின் சாயல் அவமதிப்புக்குள்ளாக்கப்படுவதை எண்ணி வருந்துவோம். திருந்துவோம்.

# இரண்டாம் நிலை

## இயேசுவின் தோள்மேல் சிலுவை சுமத்தப்படுகிறது.

### பாரங்கள் சொல்லும் பாடமென்ன?

"சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக் கூட முன்வரமாட்டார்கள்." மத்தேயு 23: 04

வெகுசனமக்கள் மீது பாரங்கள் இன்று சுமத்தப்படுகின்ற போது உழைப்பால் அவர்களுக்கு ஆதாயம் இல்லாது போவதோடு, அவர்கள் இன்றும் என்றும் வறுமைக் கோட்டுக்கு கீழாகவே தள்ளப்படுகின்றார்கள்.

ஆளும் ஆதிக்க சக்திகளால் இத்தகைய பாரங்கள் பாமர மக்கள் மீது பலவந்தமாகச் சுமத்தப்படுவதனால், அவர்களது பொருளாதார நிலை தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறது என்பது மட்டுமல்ல, சிறு தொழில் மையங்கள் நடத்தமுடியாது போவது மட்டுமல்லாமல், பலர் வேலைவாய்ப்பை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இதனால் குடும்பங்களின் பொருளாதார நிலை வெகுவே வறுமைக்கு கீழே தள்ளப்பட்டு அவர்கள் அன்றாட வாழ்வு பாரமானதாக மாற்றப்படுகின்றது.

வரிச்சுமை ஏற்றம் என்பதுவும், கடன் சுமை ஏற்றம் என்பதுவும், விலைவாசி ஏற்றம் என்பதுவும் மிகச் சாதாரண மக்கள் மீது பாரமாக்கப்படும் போது அவை கற்றுத் தரும் பாடம் என்னவென்றால், மனிதம் என்பது இங்கு மதிப்பிழந்து, மரியாதை இழந்து, மாண்பிழந்து போகிறது என்பதுவே உண்மையாகின்றது.

இயேசுவின் மீது சுமத்தப்பட்ட பாரமான சிலுவையினால் மனிதம் மாண்பிழந்து, மதிப்பிழந்து, மரியாதை இழந்து போனது என்பதுவே உண்மையானது. இன்று நம்முடைய செயல்களால், பிறர்மீது பாரங்கள், சுமைகள் ஏற்றப்படும் போது அதே மனிதம் மதிப்பிழந்து போகும், மாண்பிழந்து போகும் என்பதை எண்ணி வருந்துவோம்! திருந்துவோம்!

## மூன்றாம் நிலை

### இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.

இடைத்தரகர்களால் இடறி விழும் உழைப்பாளி!

பாடுகளின் பாதையில் தரையில் விழுந்தீர். பாரம் உம்மை வீழ்த்தியது என்பதுவே உண்மை. ஒழிக! ஒழிக! என ஓங்காரமிட்ட கூட்டத்தின் குரலே உம் மனத்தை பாரமாக்கியது என்பதுவே உண்மை. இவன் வேண்டாம்! வேண்டாம்! என்று புறக்கணித்த கூட்டத்தின் புறக்கணிப்பே உம் மன வேதனையை அதிகரித்தது. அதுவே உம்மை கீழே விழச் செய்தது என்பதுவே நாங்கள் புரிந்து கொண்ட உண்மை.

நாங்கள் பயணிக்கும் இக்காலச் சூழலில் உழைப்பாளர்களின் உழைப்பை குறைத்திடவே முடியாது என்பதுவே உண்மை. கடின உழைப்பையே எம் உழைப்பாளர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை அனுதினமும் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். இருந்தபோதிலும், உழைப்பாளர்களுக்கு உண்மை ஊதியம் கிடைப்பதில்லை. கடின உழைப்புக்கான விலையை அவர்கள் பெற்றுக் கொள்ளாது போய்க் கொண்டு இருப்பதனைப் பார்க்கும் போது, உம்முடைய மரண வேதனையோடே எங்களது உழைப்பாளர்களின் வேதனையை இணைத்துப் பார்க்கும் போது மனம் வலியையே பெற்றுக் கொள்கிறது.

எல்லா நிலைகளிலும் இன்று இடைத்தரகர்கள் உழைப்பின்றி, முதல் போடாமல், இருந்த இடத்திலேயே இருந்து சுரண்டிக் கொண்டு இருப்பதைப் பார்க்கும் போது என்று தணியும் இந்தக் கொடுமை? என்றே கேட்க தோன்றுகிறது. நேரடிக் கொள்முதலின்றி, நேரடி வியாபாரமின்றி போவதாலேயே உழைப்பாளர்கள் வீழ்ந்தே கிடக்கின்றார்கள் என்பதனை உணர்ந்து வருந்துவோம்! திருந்துவோம்!

## நான்காம் நிலை

### இயேசு தம் தாயைச் சந்திக்கிறார்.

பார்வைக்கு உண்டு பலம்!

பாதையின் பாதையில் பார்வை கிட்டியது ஊக்கமே! தாயின் பார்வை ஊக்கத்தையே, உந்துதலையே தந்தது. பாடுகளின் பாதையில் பாரத்தைக் குறைத்தது பார்வையே. அத்தனை பார்வையும் பரிதாபமாகவும், கொடூரமானதாகவும், அவமானத்தை தருவதாகவும் இருந்த வேளையில் கனிவும், தன்னம்பிக்கையும், அக்கறையும், அன்பும் கலந்த தாயின் பார்வை தனயனுக்குத் தந்த தெம்புக்கு அளவே இல்லை என்பது தானே நிதர்சனமாகும்.

எந்த கடின உழைப்பாளியும் விரும்புவது தன்னவர்கள் தன்னைப் பரிதாபத்தோடு பார்க்கும் பார்வையை அல்ல; மாறாக, பெருமிதத்துடனே கூடிய தன் முதலாளி, மூத்தவர்கள், தனக்கான அன்பானவர்களின் அக்கறையோடு கூடிய அன்பான பார்வையைத்தான் என்பதில் மாற்றமில்லை. இதுவே அவனை இன்னும் அதிக சக்தியோடு உழைக்கச் செய்யும் என்பது நாம் அறிய வேண்டிய உண்மை.

மீட்பின் உழைப்பில் இயேசு என்ற உழைப்பாளிக்கு, சக உழைப்பாளியாக மட்டுமல்ல, நல்லதொரு தாயாகவும் அன்னை இருந்து ஊக்கத்தை, உற்சாகத்தை, தன்னம்பிக்கையைத் தரும் பார்வையைப் பரிமாறிக் கொண்டார் என்பதுவே உண்மை.

ஓடி ஒளிந்து கொள்ளவில்லை. அவமானமாக நினைத்து விலகிக் கொள்ளவும் இல்லை. மீட்பின் பணியினில் தன்னுடைய வியாகுலத்தையும் உள்ளடக்கி, தன் மகனுக்கு நம்பிக்கையின் ஒளியை ஏற்றி வைத்தார் அன்னை கன்னி மரியாள்.

உழைப்பாளர்களை உதாசீனப்படுத்தாமல், உயர்வாய் மதித்துப் போற்றும் பாங்குடனே, பார்வையால் ஊக்கமளிப்போம், உற்சாகப்படுத்துவோம்; உயர்வடையச் செய்வோம்.

## ஐந்தாம் நிலை

## இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்.

### மேன்மை உணர்ந்து உதவுவோம்!

உழைப்பின் மேன்மையைக் கண்டவனுக்குத்தான் அடுத்தவரின் உழைப்புத் தெரியும். அப்படித் தெரிந்தவரே கரம் கொடுத்திட முன்வருவார். வயலில் இருந்து வந்த உழைப்பாளி சீமோன் இயேசுவுக்கு சிலுவை சுமக்க உதவினார். பாரம் சுமக்கும் ஒரு பாமரன், பாலத்தில் தள்ளாடிக் கொண்டு, தனியே தள்ளிக் கொண்டு போகும் ஒரு தொழிலாளிக்கு உதவிட முன்வருவார். குடை சாய நிற்கும் ஒரு வண்டிக்கு துணைக்கு ஓடி உதவிடுபவர் ஓர் உழைப்பாளியே. உண்மையாய் உழைத்து முன்னேற்றம் கண்டவரே தன் தொழிலாளர்களை அவர்களது உழைப்பினைக் கண்டு உதவிட முன்வருவார்.

அப்துல்கலாம் வாழ்வில் நடந்த உண்மையாய்ச் சொல்லும் நிகழ்வு. தன்னிடம் வேலை பார்க்கும் ஒருவர் மாலையில் சீக்கிரம் போய் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வெளியே போக வேண்டும் என உத்தரவு பெற்று வேலை செய்து கொண்டு இருந்த போதினில், நேரம் கடந்து வேலையில் அவர் தீவிரம் காட்டி நின்றபோது தன்னுடைய சக ஊழியருக்காக இவர் அவரது வீட்டிற்குப் போய், அவர் சார்பில் இவர் பிள்ளைகளை அவர் விரும்பியவாறு கூட்டிக் கொண்டு போனாராம். பிள்ளைகள் ஏமாந்து போய், தன் தகப்பனாரை கோபப்பட்டு விடக் கூடாதே என இவரே தன் தலைமை அதிகார நிலையை விட்டு இறங்கி உதவி செய்தார் எனப் பதியப்பட்டுள்ளது.

உழைப்பாளிக்குத் தான் அடுத்தவரின் உழைப்பின் மேன்மையை உணர முடியும். இன்றைக்கு விவசாயிகளின் நண்பர் என்று சொல்லப்படுபவரெல்லாம் உழைத்தவர்களா? இன்றைக்கு உழைப்பாளர்களின் உழைப்பை மதித்து உயர்வு காணச் செய்யாது போகிறார்கள் என்றால், அவர்கள் உண்மையாய் உழைத்திருந்தால்தான், உழைப்பினால் முன்னேறி இருந்தால்தானே சக மனிதனின் உழைப்பையும் உணர்வையும் மதித்திட முடியும். அறியாத அறிவிலிகள் உழைப்பை அவமதிக்கத்தானே செய்வார்கள். பசியால் வருந்தியவனுக்குத்தானே பசியின் கொடுமையும் வருத்தமும் அடுத்தவரின் நிலையும் புரியும். உழைப்பின் மேன்மையை உணர வருந்துவோம்! திருந்துவோம்!

# ஆறாம் நிலை

## இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறார்.

### விலைமதிப்பில்லாதது வியர்வையே!

பாடுபடும் எந்த மனிதரும் சிந்துவது வியர்வையைத்தான். உழைப்பிலே வெளிப்படுவது வியர்வைத்துளிகள்தான். இயேசுவின் பாடுகளில் வியர்வை இரத்தத் துளிகளாக வெளிப்பட்டன. கெத்சமனித் தோட்டத்தில் உருக்கமாக செபித்த வேளையில் வியர்வைத் துளிகள் இரத்தமாய் வெளிப்பட்டது என்பது பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் கசையால் அடி, முள்முடி இதனால் ஏற்பட்ட காயங்களால் ஒட்டு மொத்த வியர்வையும் இரத்தமாகவே வடிந்தது. வெரோணிக்கா வியர்வையினால் புழுதியும், இரத்தமும் படிந்த முகத்தை துடைக்க, முகமோ துணிகளில் பதிந்தது என்பதனை வரலாறு சொல்லி நிற்கிறது.

வியர்வை சிந்தப் பாடுபடனுமா? எனக் கேட்டுப் பார்க்கிறது இன்றைய சமூகம். எனவே வியர்க்கவே கூடாது எனச் சொல்லி இன்று குளிரூட்டும் அறையில் இருந்து இருதய வியாதி வந்த பின்னர் மருத்துவரிடம் போய் எனக்கு அதிகமாகவே வியர்க்கிறது, மாடிப் படி கூட ஏறிட முடியவில்லை என்று சொல்லி நிற்போரை பார்க்கும் போது பரிதாபமே விஞ்சுகின்றது. வியர்க்க வியர்க்க வேலை பார்ப்பது அநாகரீகம் எனச் சொல்லி சொகுசாக உட்கார்ந்து வேலை பார்ப்பதுதான் உயர்வானது எனவும் ஒரு கூட்டம் சொல்லி தங்களை உயர்த்திக் கொள்கிறது. வியர்க்காமல் இருப்போரின் அவதி என்ன என்பதனை புரிந்து கொள்ளாத கூட்டம், வியர்வையின் விலையை மதிப்பிடாத சமூகம் வளர்ச்சியைக் கண்டு கொள்ளுமா என்பதுவும் கேள்வியே.

இயேசு சிந்திய வியர்வை விலைமதிப்பில்லாதது. பெற்றோர் சிந்திய வியர்வை நம்மை உயர்த்தி நிற்கின்றது. விவசாயிகளின் வியர்வை நமக்கு உணவளித்து வாழ்வளிக்கின்றது. உழைப்பாளியின் வியர்வையில் தான் முதலாளியின் உயர்வு அடங்கி நிற்கின்றது. நம்முடைய வியர்வை இன்று யாரை உயர்த்துகின்றது? எண்ணுவோம்! வருந்துவோம்! திருந்துவோம்!

# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

### குறைத்து மதிப்பிடும் சமூகம் உயருமா?

விவசாயிகளின் போராட்டத்தை இழிவு படுத்திப் பேசும் சமூகம். அவர்களின் உழைப்பை அறியாத முதலாளிக்கு தாரை வார்த்துச் சிலரை கோடீஸ்வரராக உயர்த்த, விவசாயியின் நிலையை அடிமையைப் போன்றே கையேந்தச் செய்யும் உலகமிது நம் உலகம். உழைப்பாளியை, அவரது உழைப்பினை குறைத்து மதிப்பிடச் செய்து, இன்னும் சமூகத்தில் எழ முடியாது செய்யும் காரியத்தையே ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் செய்து வருகிறார்கள் என்பதுவே வேதனை தருகிறது.

உழைப்புக்குக் கடன் பெற்று, மிகச் சிறிய தொகையைக் கூட புயலால், வெள்ளத்தால், அதிக காற்றால், நீரின்மையால் இப்படிப் பல சூழலின் வறுமையால் கட்ட இயலாது போகும் போது, அவர்கள் குடியிருக்கும் ஓலை வேய்ந்த குடிசையை பறித்தல்(ஜப்தி) என்கிற பெயரால் கையகப்படுத்தும் அரசு, மிக சிலர் கோடியில் கடன் பெற்று, வாங்கிப் போட்டு இருக்கிற அசையாச் சொத்து பற்றி கூட அறியாத அளவுக்கு செல்வத்தைப் பெருக்கிக் கொண்டவர்களின் கடனைப் பல இலட்சக் கோடிகளை மிகச் சிறியோருக்கு தள்ளுபடி செய்கிறது என்றால் உழைப்பின் மதிப்பறியாத நிலையே, தாண்டவமாடுகிறது என்பது உண்மை. நடைமேடை உணவகம். நடைமேடை முடி திருத்தகம், நடைமேடை உழைப்பாளிகள் தாங்கள் இரவிலே தங்க புறம்போக்கு நிலத்தில் கட்டி வைக்கும் சிறு சிறு குடிசைகள் ஒரே இரவில் தீக்கு இரையாகிப் போகின்றன. காரணம் என்னவென்றால் இந்த இடங்கள் பின்னொரு நாளில் மாடிக் குடியிருப்புகள், வணிக வளாகங்கள், பெரு நிறுவன மருத்துவமனைகள், கல்வி கடைகள் சில தனி மனிதர்கள் கட்டிக் கொள்கிறார்கள். இப்படியே சமூகத்தில் உழைப்பாளியின் மதிப்பு குறைத்தே மதிக்கப்படுகின்றன. உழைப்பே இல்லாது உயர்ந்து கொள்ளலாம் என்ற தவறான தகவலே தலைமுறையினருக்கு கொடுக்கப்படுகின்றது. உழைப்பாளியின் உழைப்பை மதிக்க மறுக்கும் சமூகம் அவனை எழவே விடாது பார்த்துக் கொள்கின்றது என்றால் என்றைக்கு உயரும் இந்த சமூகம்? வருந்துவோம்! திருந்துவோம்!

# எட்டாம் நிலை

## இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

### உழைப்பாளி விரும்பும் ஆறுதல்

யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? வேலைக்குப் போய் திரும்பும் துணைவர், வீட்டில் இருக்கும் துணைவியார் தனக்கு ஆறுதலாக இருந்து பேசிட வேண்டும் என்று விரும்புகிறார். வீட்டிலே இருக்கும் துணைவியார் தன் வேலைகளைச் செய்து விட்டு, வீட்டுக்குத் திரும்பி வரும் துணைவர் தனக்கு ஆறுதலாக இருந்திட வேண்டும் என விரும்புகிறார்கள்.

யாருடைய உழைப்பு உயர்ந்தது என்பது போல ஒரு கேள்வி கேட்கப்படுகின்றது.

இன்றைய நிலையே வேறாக இருக்கின்றது.

குடும்பத்தில் இருவருமே உழைத்தால்தான் வாழ்வுண்டு என்ற நிலையில் இருவருமே காலையில் எழுந்ததில் இருந்து, இரவு படுக்கைக்கு உறங்கப் போவது வரை உழைத்துக் கொண்டே இருக்கிற நிலையில் யாருக்கு யார் ஆறுதல் கூறுவது என்றாகி விடுகின்றது.

இயேசுவுக்கு யார் ஆறுதல் சொல்வது? மகளிர் ஒன்று கூடி இயேசுவுக்கு ஆறுதல் சொல்ல இயேசுவோ அப்பெண்களுக்குப் பதில் மொழி கொடுத்து தெளிவாக்கினார். ஆறுதலின் ஊற்றான தூய ஆவியைச் சுதந்தரித்துக் கொள்ள இறை மகனோ ஞான அறிவோடு சூழ்ந்து நின்ற பெண்களைப் பார்த்துக் கூறினார்: “இப்பாடுகளுக்குக் காரணமான குற்றம் யாருடையது எனக் கண்டறிந்து அதற்காக அழுங்கள்” என்று தெளிவைத் தந்தார்.

ஆறுதலின் ஊற்றான தூய ஆவியையே நாமும் பெற்றிருக்கிறோம். பிறர் நமக்கு ஆறுதல் அளிக்க வேண்டுமென்று எதிர்நோக்குவதை விடுத்து, நாம் பிறருக்கு ஆறுதல் கூறும் பணியினைச் செய்வதுவே கிறிஸ்தவப் பண்பான காரியம்.

உழைப்பு என்பது எல்லாருக்குமானதுதான். இதிலே உயர்வு - தாழ்வு என்பது ஆகாததுவே. ஆறுதல் என்பதனை அனைவருக்கும் கொடுத்து வாழ்வதுவே கிறிஸ்தவ வாழ்வாகும். வருந்துவோம்! திருந்துவோம்!

# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

### இலவசங்களால் வீழ்ந்து கிடக்கும் உழைப்பாளிகள்!

மனிதன் தன் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடம் இவற்றைப் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு என்றாலும், இன்றைக்கு உயிர் வாழ்வோர் பலர் உரிமையின்றி வறுமைக்கோட்டுக்கு கீழாக வீழ்ந்தே கிடக்கின்றனர் என்பதுவே உண்மை. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி வறுமைக் கோட்டுக்கு கீழாக வாழ்வோரின் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டே இருக்கிறது என்பதுதான் உண்மையும் கூட.

உழைப்பாளிக்கு உடுக்க உடையும், உண்ண உணவும், இருக்க உறைவிடமும் தர வேண்டியது சமூக, அரசியல் கடமை என்பதை வசதியாக மறந்தே போய் விடுகிறார்கள். அம்மா உணவகம், பசுமை வீடுகள் திட்டம், சத்துணவுத் திட்டம், காலணி, மடிக்கணனி, சீருடை என எத்தனை எத்தனையோ இலவசங்களை ஏதோ அவர்கள் கொடுப்பதுபோல தங்களது உழைப்பில் இருந்து கொடுப்பது போல காட்டிக் கொண்டு, அதிலேயும் எத்தனை ஊழல்கள் இன்றும் நிலுவையிலேயே இருந்து வருகிறது. நிரூபிக்க முடியவில்லையென்று வசதியாக முடித்தும் வைக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

இத்தனை இலவசங்களும் எதற்காக? உழைப்பாளியை சோம்பேறியாக்கு வதற்காக இல்லை. கொள்ளையடிப்பதற்காகவே. உழைப்பாளிகளின் உண்மை நிலையை உயர்த்திடாது, பலப்பல தரங்கெட்ட பொருட்களை, ஆடு, மாடுகள், கோழிகள் கூட உண்ண மறுக்கும் விலையில்லாத அரிசிகளை கொடுத்து, விழுந்து கிடக்கும் கூட்டத்தை வீழ்த்துவதிலேயே கவனமாக இருப்பதைப் பார்க்கும் போது, இறை சாயலில் இருக்கும் மனிதன் இன்றும் வீழ்ந்தே கிடக்கின்றார் என்றே தோன்றுகிறது. நிலை கெட்ட இந்த மாந்தர்களை இன்றும் எண்ணி அவர் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டே இருக்கின்றார் என்பதுவே உண்மையாகின்றது. இலவசங்களைத் தூர எறிந்து விட்டு, பத்து விரலால் உழைத்து, ஐந்து விரல்களால் சாப்பிட்டு வாழ்வோம் என உறுதியெடுத்தாலே உயர்வோம். வருந்துவோம்! திருந்துவோம்!

## பத்தாம் நிலை : இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்.

### மதிப்பும் மாண்பும் கொண்ட உழைப்பாளி!

மானமில்லாத மானிடரைக் காணும் போது, இன்னும் மானுடத்தை மானபங்கப்படுத்திக் கொண்டே தானே இருக்கிறார்கள் என்ற கோபம் எழவில்லையா? பொறுப்புள்ள ஒருவர் பொறுப்பில்லாது இப்படி பேசினார்: எங்க அரசு குடும்பத்திற்கு ரூபாய் கொடுத்தது உறுதியாக தெரியும். இது மீண்டும் எங்களது அரசுக்கே வந்து சேரும் என்று.

உழைப்பாளியை உறிஞ்சி வரும் ஊதாரித்தனத்தை என்னவென்று சொல்லுவது. உழைப்பாளியை உடையில்லாது நடு ரோட்டிலே அம்மணமாய் ஆட வைத்து வேடிக்கைப் பார்க்கும் அரசு மக்கள் அரசாகுமா? அதுதான் வெற்றி நடை போடும் அரசா? உழைப்பாளியின் ஊதியத்தை திருடிக் கொண்டு, அந்த உழைப்பாளியின் குடும்பத்தார் இரவிலே பசியோடும், பட்டினியோடும், சண்டை சச்சரவோடும் அடித்துக் கொன்று வரும் நிலையை ஏற்றமிகு தமிழகம் என்று சொல்லுவது கயமைத்தனமில்லையா?

உழைப்பாளி இன்றைக்கு வஞ்சிக்கப்படுவது ஊதாரித்தனத்தால் மட்டுமல்ல, உழைப்பாளி இன்றைக்கு திறமையற்ற நிர்வாகத்தாலும் வஞ்சிக்கப்படுகின்றார்கள். இதனாலே குடும்பங்கள் இன்றைக்கு அவமானத்தைச் சந்திக்கிறது. சில நேரங்களில் ஒட்டுமொத்தக் குடும்பமும் இந்த அவமானத்தைக் கருத்தில் கொண்டு, தங்களை மாய்த்துக் கொள்ளவும் முற்படுகின்றார்கள். இதற்கு நான் என்ன செய்ய முடியும் என்று பொறுப்பைத் தட்டிக் கழிப்பது கிறிஸ்தவனுக்கு அழகாகிடுமா?

ஒவ்வொரு உழைப்பாளியும் மானத்தோடு வாழவேண்டும், அவன் குடும்பமும் மான, மரியாதையோடு வாழ்ந்திடல் வேண்டும், அந்த உழைப்பாளியின் உழைப்பாலேயே நானும் என் குடும்பமும் மான, மரியாதையோடு உண்டு மகிழ்ந்து வருகிறோம் என்பதனை நினைத்துப் பார்த்திடல் வேண்டும். எனவே இதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டறிந்து அவனுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த, மதிப்போடு, மரியாதையோடு நடத்திடுவதுவே நம்மவரின் தலையாய கடமை என்பதை உணர்ந்து வருந்துவோம்! திருந்துவோம்!

# பதினொன்றாம் நிலை

## இயேசுவைச் சிலுவையில் ஆணிகளால் அறைகிறார்கள்.

### காய்ப்புக் கண்ட கரங்கள் முத்தமிடப்படக் கூடியவையே!

இயேசுவைச் சிலுவையில் அறைந்தது. கரங்களை விரித்து ஆணிகளால் அறைந்தது. கால்களைப் பிணைத்து இணைத்து அறைந்தது ஆணிகளால்.

நற்கருணையைக் கரங்களில் கொடுக்கும் போது, சிலருடைய கரங்களைப் பார்த்தால், காய்ப்புக் கண்ட, முரட்டுத் தோலைப் பெற்ற கரங்களைத் தொட்டு இயேசுவின் திருவுடலை வைக்கும் போதெல்லாம் அந்தக் கரங்களை முத்தமிடவேண்டும் என்றே தோன்றும்.

உண்மை உழைப்பாளியின் கரங்கள் காய்ப்புக் கண்டிருக்கும் என்பதுவே உண்மை. காய்ப்புக் கண்ட கரங்கள் நிச்சயமாக பல தியாகங்களைச் செய்திருக்கும் என்பதிலும் மாற்றம் இல்லை.

ஆண்டுக்கு ஒருமுறை பாதங்களைத் தொட்டு, கழுவும் சடங்கினிலே பல ஏழை எளியவர்களின் பாதங்களைத் தொட்டு முத்தமிடும் போது, இந்த கால்கள் காலணி இல்லாது வெறும் கால்களாக எத்தனை மைல்கள் எதற்கெதற்காய் அலைந்து திரிந்து இருக்கும். மேடு பள்ளங்கள், காடு, கழனிகள் ஏறி இறங்கி இருக்கும். எது எது பதம் பார்த்ததோ தெரியவில்லையே என்று உணரத் தோன்றும்.

உண்மை உழைப்பாளிகளின் கால்கள் வறண்டதாகவும் கடினமுள்ளதாகவும், பல வெடிப்புகளை உள்ளடக்கியதாகவும் இருக்கும். இத்தகைய தியாகங்களை இன்று கண்டு கொள்ளவே இந்த நிலை நம்மை அழைக்கிறது. இன்றும், இனி வரும் காலத்திலும் இத்தகைய உழைப்பாளர்களைச் சமூகம் காணுமா? கரடு முரடான கால்களையும், காய்ப்புக் கண்ட கரங்களையும் காணும் சமூகம்தான் ஆரோக்கியமான சமூகம் உருவெடுக்க முடியும் என்பதை உணர்ந்து வருந்துவோம்! திருந்துவோம்!

## பனிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்.

### உழைப்பாளியே! உன்னை மாய்ப்பது அறிவீனமே!

இயேசு சிலுவையில் மரணத்தைச் சந்தித்தார். தோல்வி எனப் பேசப்பட்டது. தன்னை விடுவிக்கத் தானே கோரினாரே தவிர, தன்னை மாய்த்துக் கொள்ள எத்தனிக்கவில்லை. சாவு வரும் அளவுக்கு பாடுகளையும், துன்பத்தையும் ஏற்றுக் கொள்ள தன்னை அர்ப்பணித்தார்.

வறுமை, ஏழ்மை, தாழ்மை, தோல்வி, விரக்தி, வெறுமை என வரும் போது மனிதன் ஏன் தன்னை மாய்த்துக் கொள்கிறான்? பல நூறு விவசாயிகள் தங்களை மாய்த்துக் கொண்டார்கள் என புள்ளி விவரம் சொல்லும் அரசு அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவா போகிறது? இல்லை தனக்கும் தன் அரசுக்கும் அவமானம் எனச் சொல்லி பதவி துறக்கவா போகிறது? தவறான வழிநடத்துதலாலும், ஆட்சி செயல்பாடுகளாலும் பல நூறு குடும்பங்கள் அனாதையாக்கப்படுகிறதே என்று சொல்லி தலை குனியவா போகிறார்கள்?

நாட்டின் தலைமை அதிகாரி கூறினாராம்: “அரசியல்வாதிகளின் தோல் மிகவும் கடினமானது. எனவே மாட்டுக்குப் போடும் ஊசியைப் போடுங்கள்” என்று. வெட்கம் கெட்ட மானிடம் எருமை மாட்டின் மீது மழை பெய்வதைப் போல சுரணையே இல்லாது போய்க் கொண்டிருக்கிறது என்பதுவே உண்மை.

உழைப்பாளியே! நீ சாவு வரும் அளவுக்கு உழைக்கலாமே தவிர, உன்னையே நீ அழித்துக் கொள்ளும் அளவுக்கு நீயே சாவை வருவித்துக் கொள்வது என்பது அழகு அல்ல. எல்லாரும் சாகத்தானே போகிறார்கள்? உன்னை சாவுக்கு தள்ளும் மனித கூட்டம் என்ன சாகாமலா இருக்கப்போகிறது? மனம் வருந்தாதே! மனம் கலங்காதே! மனம் தளராதே! இன்னும் இன்னும் சற்றே அதிகமாக உழைத்துப் பார்; பொறுத்திருந்து பார். உன்னைக் காப்பார்; உன்னை வாழ்விப்பார்; உனக்கான பலன் விளையச் செய்வார்; அவரே உனக்காக மரித்துச் சாவுக்கு சாவு மணி அடித்தவர்; வருந்துவோம்! திருந்துவோம்!

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் திருவுடலை மரியாவின் மடியில் வளர்த்துகிறார்கள்.

### உழைப்பாளியே வீம்பு ஆகாது!

நான் உழைத்தேன்; நான் சம்பாத்தியம் செய்தேன் என்கின்ற மமதை, ஆணவம், செருக்கு ஒருபோதும் ஒரு உண்மை உழைப்பாளிக்கு எழவே கூடாது. உழைப்பாளி உழைக்கிறார் என்பதில் மாற்றம் இல்லை. ஆனால் அவன் உழைப்புக்கு காரணியாய் இருப்பது தெய்வமும், கண் கண்ட தெய்வங்களாகக் காட்சி தரும் உழைப்பாளியின் பெற்றோரும்தான்.

தெய்வமாய் நினைக்கவில்லை என்றால் உழைத்திட ஞானம், அறிவு, சக்தி கிடைக்கப் பெற்றிட இயலாது உழைப்பாளிக்கு. பெற்றோரும் அவர்களுடைய மாதிரிகையும் இல்லையென்றால் இவர் எங்கிருந்து வந்திருப்பார்?

எனவே உழைப்பாளியின் உழைப்புக்கு கடவுளும், அவனுடைய பெற்றோரும் தான் காரணம். உங்களையே அறிவாளிகள் என்று நினைத்து பெருமிதம் கொள்ள வேண்டாம். உரோ 12:16

ஆண்டவருக்குத் திருவுளமானால், நாங்கள் உயிரோடிருப்போம்; இன்னின்ன செய்வோம் எனச் சொல்லுவதே முறை என யாக்கோபு கூறுகிறார் யாக்கோபு 04:15

இணைச்சட்டம் 08: 17 எங்கள் ஆற்றலும் எங்கள் கைகளின் வலிமையுமே இந்தச் செல்வங்களை எங்களுக்கு ஈட்டித் தந்தன என்று உங்கள் உள்ளங்களில் எண்ணாதபடி கவனமாய் இருங்கள்

இந்த இறைவாக்குகள் உரைப்பது போல ஒரு உண்மை உழைப்பாளி தன்னுடைய உழைப்பு அந்த உண்மை இறைவனாலேயே ஆகிறது என்பதை உணர்ந்து அவரிடம் தன்னை ஒப்புவிக்க்கடவான்.

இதனைப் போலவே சீராக் 03: 08 சொல்லுகிறது, “சொல்லாலும் செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள். அப்பொழுது உங்களுக்கு ஆண்டவரின் ஆசி கிடைக்கும்.” தன் தனயனின் உண்மை உழைப்பாலே நாங்கள் பலம் பெற்றோம். அவர்களுடைய உண்மை உழைப்பு எங்களுக்கு

பலம் சேர்த்து உள்ளது. எங்களுக்கு நல்ல மாதிரிகையாய் இருக்கின்றார்கள் என்பது போன்ற நல்லவைகளைக் கேட்பது பெற்றோருக்கு பெருமை. இதனைப் பெற்றுக் கொடுப்பது ஒவ்வொரு பிள்ளையும் தன் பெற்றோருக்குச் செய்யும் கடமையும் பொறுப்பும் ஆகும்.

தாயின் மடியில் உயிரற்ற நிலையில் இருந்தாலும் வேதனைதான் வாழ்க்கை என்றாகிப் போன போதும், வியாகுலங்களை உள்ளத்திலே தாங்கியிருந்தாலும், இளம் வயது தனயனை உயிரற்ற நிலையில் மடியில் கொண்டு இருந்தாலும், இறைத் தந்தையின் திருவுளத்தையேற்று மானுடத்திற்கு மீட்பை தன் சாவின் வழியாக கொடுத்த மகனைப் பெற்றதற்கு மகிழ்ந்திருப்பார்கள் அன்னை மரியாள்.

## பதினான்காம் நிலை : இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

### உழைப்பாளர்களுக்கு செய்யும் துரோகம்

மனுமகனுக்கோ தலை சாய்க்கக் கூட இடமில்லை என்றவருக்கு மாற்றானின் கல்லறைத் தோட்டம் மஞ்சமானது. ஏழை எளியவரின் விவசாயக் கிட்டங்கி ஏன் அதானி அம்பானியின் கிட்டங்கியாகிட கூடாது? இந்தக் கேள்வி மனதிலே பட்டது. இரண்டும் ஒன்றாகாது என்பது தெரிந்த ஒன்றே. ஏழை எளிய மக்களுக்கு என்று அரசு கிட்டங்கி உருவாக்கப்பட்டு சுரண்டல் இல்லாத நிலையில் இருந்த சூழல் இன்று தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்ட பின்னர், அவர்கள் தங்களது கிட்டங்கியில் பதுக்கி, ஒதுக்கி, பொருளின் தேவையை உருவாக்கி, விலையை உயர்த்தி வைத்து, அதே ஏழை, எளியவர்கள், உழைப்பாளர்கள் பெற்றுக் கொள்ள முற்படும் போது, பல மடங்கு உயர்த்தப்பட்ட தொகைக்குத் தான் பெற முடியும் என்ற நிலை நிலவுகிறது என்பது தெரிந்ததே.

எளியவர்களுக்கு என்று அவர்கள் தேர்ந்தெடுத்த அரசு அவர்களுக்கு உதவிடாது போவது என்பது வேடிக்கையானதே. தனியார்மயம் என்பது இன்றைக்கு மிகச் சொற்ப பேருக்காக பலர் உழைத்து, வியர்வைச் சிந்திப் பாடுபட, எந்த உழைப்பும் உண்மையும் இல்லாது சிலர் வளர்கிறார்கள், வாழ்கிறார்கள் என்பது அநீதியே. மாற்றான் சூசை தன் கல்லறையை இயேசுவின் அடக்கத்திற்குத் தாரை வார்த்தார் என்றால் பெருந்தன்மையான மனோபாவமும், எந்த ஆதாயமுமின்றி செய்த செயல்பாடு என்பதுவே விவிலியம் சொல்லி நிற்கும் பாடம். பதுக்குதலும் ஒதுக்குதலும் கபடத்தனமே. அன்றாடம் அடுப்பு பற்ற வைக்காது போகும் எளியவர்களின் ஏழ்மையைச் சுரண்டும் அக்கிரமம் அயோக்கியத்தனமே.

ஒரு வேளை உணவு கூட இல்லாது உழைத்து சோர்வுற்றுப் படுக்கைக்குச் செல்லும் பாமரர்கள் பல கோடிப் பேர் இருக்க, சில பத்து பேர் உலக பணக்காரர் பட்டியலில் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பது எவ்வளவு பெரிய ஏமாற்றுத்தனம். தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழிப்போம் என்றான் வீரமிகு கவிஞர் பாரதியார். தனியாரின் கிட்டங்கிகள் உழைப்பாளர்களுக்கு செய்யும் துரோகமே என்பதை உணர்ந்து வருந்துவோம்! திருந்துவோம்!

## சிலுவைப்பாதை முடிவில்

பொறுத்தருளும் கர்த்தாவே!

உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

என்றென்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் சுவாமி.

தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

## திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

புனித மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். / ஆமென்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!